கன்னியாகுமரியில் கல்லூரி மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த

த.வெ.க. நிர்வாகி மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் முதல்வர் விஜய்!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 24-

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள சமூக வலை தளப் பதிவு வருமாறு:

கன்னியாகுமரியில் கல்லூரி மாணவிக்குப் பாலி யல் தொல்லை கொடுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தனது கட்சி நிர்வாகி மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் முதல்வர் விஜய்?

சரித்திர பதிவேடு குற்றவாளிகளும், பாலியல் குற்ற வாளிகளும் நிறைந்த கூடாரமாகத்தான் த.வெ.க. இருக்கிறது. முதலில் முதலமைச்சர் விஜய் அவர்கள், ஊருக்கு அறிவுரை சொல்வதற்கு முன், தனது கட்சி யில் யாரையெல்லாம் சேர்த்திருக்கிறார் என்பதைச் சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்ட மாணவிக்குப் பாதுகாப்பு வழங்கி, குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது பாரபட்சமின்றிச் சட்ட நட வடிக்கை எடுக்க வேண்டும். தவறினால், மக்களுடன் இணைந்து ஜனநாயகப் போராட்டத்தின் மூலம் இந்த அரசுக்குப் பாடம் புகட்டுவோம்!

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றிய மாவட்டப் பிரதிநிதி

கட்டத்தொட்டி எம்.குணசேகரன் இல்லத் திருமண விழா!

முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வாழ்த்துகிறார்! ஆ.கிருஷ்ணசாமி - கழக முன்னணியினர் பங்கேற்பு!

திருவள்ளூர், அக். 24-

திருவள்ளூர் மத்திய மாவட்டம், பூவிருந்த வல்லி மேற்கு ஒன்றிய மாவட்டப் பிரதிநிதி கட் டத்தொட்டி எம்.குணசே கரன் - ஜி.சாந்தி ஆகியோ ரின் இல்லத் திருமண வரவேற்பு விழா மற்றும் திருமண விழா, திருவள்ளூர் மாவட்டம், வேப்பம்பட்டு பகுதியில் உள்ள எம்.கே.என். பேல ஸில் நடைபெற உள்ளது. இன்று (24.10.2026 சனிக்கி ழமை) மாலை 6.30 மணிக்கு திருமண வர வேற்பு விழாவும், 25.10.2026 ஞாயிற்றுக்கி ழமை காலை 7 மணிக்கு திருமண விழாவும் நடை பெறுகின்றன.

இவ்விழாவிற்கு பூவிருந் தவல்லி மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் டி. தேசிங்கு வரவேற்புரை யாற்றுகிறார். திருவள்ளூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.பிரேம் ஆனந்த் மற்றும் ஒன்றியக் கழக நிர்வாகிகள் பரமேஸ் வரி கந்தன், இ.கந்தபாபு, சி.அண்ணாகுமார், சுமதி விஜயகுமார், ஜெ. சாக்ர டீஸ், ஜி.சுகுமார், ப.கந் தன், ஜி.பிரவீன் குமார், எம்.கோபிநாத், இ.வி.பி. பிரதீப் உள்ளிட்டோர் முன்னிலை வகிக்கின்ற னர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலா ளரும், முன்னாள் அமைச் சருமான ஆவடி சா.மு. நாசர் தலைமை வகித்து, மணமக்கள் ஜி.பிரீத்தி - ஆர்.ரஞ்சித் ஆகியோரை வாழ்த்துகிறார்.

மேலும், மாநில ஆதிதி ராவிடர் நலக்குழு அணிச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரு மான ஆ.கிருஷ்ணசாமி, தலைமைச் செயற்குழு



உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாநில இளைஞ ரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் மாநில மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகளான சி. ஜெரால்டு, ம.இராஜி, வி.ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.விமல் வர் ஷன், எம்.முத்தமிழ் செல் வன், வி.குமார், ஜெ.மகா தேவன், காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர், இளைஞரணி நடுக்குத் தகை கே.சுரேஷ்குமார், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர்க் கழ கச் செயலாளர்களான சன்.பிரகாஷ், ப.ச. கம லேஷ், ஜி.ஆர்.திருமலை, தி.வை.இரவி, ஆர்.ஜெயசீ லன், தி.வே.முனுசாமி, என்.இ.கே.மூர்த்தி, ஜி.ராஜேந்திரன், பேபிசே கர், பொன்.விஜயன், ஜி. நாராயண பிரசாத், தங்கம் முரளி, டி.முரளி கிருஷ் ணன் உள்ளிட்ட கழக முன்னணியினர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், ஊராட்சிக் கிளைக் கழகச் செயலாளர்கள், இந்நாள் மற்றும் முன்னாள் உள் ளாட்சி மன்றப் பிரதிநிதி கள் எனப் பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர். விழா வின் முடிவில் கிளை இளைஞரணி அமைப்பா ளர் ஜி.கருணாமூர்த்தி நன்றியுரை ஆற்றுகிறார்.

பொம்மை முதல்வர் விஜய் ஆட்சியில்

கரூர் அருகே ஏரியில் வண்டல் மண் கடத்தல்!

இரண்டு பொக்லைன் இயந்திரங்கள், லாரிகளை முற்றுகையிட்ட பொதுமக்கள் – அதிகாரிகள் விசாரணை நடத்தக் கோரிக்கை!

கரூர், அக். 24 -

கரூர் மாவட்டம் வீர ராக்கியம் பெரிய ஏரியில் அனுமதியின்றி வண்டல் மண் எடுக்கப்படுவதாகப் புகார் எழுந்துள்ளது. இதையடுத்து, மண் எடுக் கப் பயன்படுத்தப்பட்ட தாகக் கூறப்படும் இரண்டு பொக்லைன் இயந்திரங்கள் மற்றும் லாரிகளை அப்பகுதி பொதுமக்கள் முற்றுகை யிட்ட சம்பவம் பரப ரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

பொம்மை முதல்வர் விஜய் ஆட்சியில் கனிம வள கடத்தல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இது குறித்து நீர்வளத் துறை, கனிமவளத் துறை, மாவட்ட நிர்வாகம் யாரும் கண்டு கொள்வ தில்லை என தொடர்ந்து குற்றச் சாட்டு எழுப்பப் பட்டு வருகிறது.

கரூர் மாவட்டம் உப்பி டமங்கலம் அருகே பால ராஜபுரம் பகுதியில் அமைந்துள்ள வீரராக்கி யம் பெரிய ஏரியில், கடந்த 10 நாட்களாக இரண்டு பொக்லைன் இயந்திரங்கள் மூலம் வண்டல் மண் எடுக்கப் பட்டு, ராட்சத டாரஸ் லாரிகளில் ஏற்றிச் செல் லப்படுவதாகப் பொது மக்கள் குற்றம் சாட்டுகின் றனர்.

இதுவரை ஆயிரக்க ணக்கான லோடு மண் எடுத்துச் செல்லப்பட்டி ருக்கலாம் என்றும் அவர் கள் தெரிவிக்கின்றனர். ஏரியில் நீண்டதூரத்திற்கு 20 அடிக்கும் மேல் தோண்டப்பட்டு இருப் பதை சுட்டிக்காட்டினர்.

பாலம் கட்டுவதற்காக..

தேசிய நெடுஞ்சா லைப் பாலம் கட்டுமா னப் பணிகளுக்காக மண் எடுத்துச் செல்வதாகக் கூறி, ஏரியிலிருந்து வண் டல் மண் எடுத்துச் செல் லப்படுவதாகவும், அனும திக்கப்பட்ட அளவை விடக் கூடுதலாக மண் எடுக்கப்படுகிறதா என் பது குறித்து விசாரிக்க வேண்டும் என்றும் அப்ப குதி மக்கள் வலியுறுத்து கின்றனர்.

மண் எடுப்பதற்கு மாவட்ட ஆட்சியரின் உத்தரவு இருப்பதாக சம் பந்தப்பட்டவர்கள் கூறி யதாகவும், அந்த உத்தர வைக் காட்டுமாறு பொதுமக்கள் கேட்ட போது அதைக் காட்ட வில்லை என்றும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வு செய்ய வேண் டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

மேலும், ஏரியில் எடுக் கப்பட்ட மண்ணின் அளவு, லாரிகளில் கொண்டு செல்லப்பட்ட மண்ணின் அளவு மற்றும் அதன் பயன்பாடு ஆகிய வற்றை முறையாகக் கணக்கிட்டு, விதிமீறல் உறுதி செய்யப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என் றும் வலியுறுத்தி யுள்ளனர்.

விவசாய பயன்பாட் டிற்காக வண்டல் மணல் அனுமதி கொடுக்க மறுத்து வருகின்றனர்.

அருகில் உள்ளவர்கள் எடுத்தாலும் உடனே காவல் நிலையத்திற்கு டிராக்டரை கொண்டு சென்று வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கும் நிர்வாகமும், காவல்துறையும் இதை ஏன் கண்டு கொள்ள வில்லை என விவசாயிகள் கேள்வி எழுப்பினர்.

அப்போது அங்கு கிருஷ்ணராயபுரம் தவெக. எம் எல் ஏ சத்யா வந்தார்.

அவரிடம் இது குறித்து கேட்டபோது எந்த பதி லையும் சொல்லாமல் விசாரிக்கிறேன் என்று காரில் ஏறிப் போய்விட் டார்.

ஏரிகளில் இருந்து வண் டல் மண் எடுப்பதற்கான அனுமதி, அளவு மற்றும் பயன்பாடு குறித்து வெளிப்படையான விளக் கம் அளிக்க வேண்டும். இதன் பின்னணியில் இருக்கும் ஆளுங்கட்சி னர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என் பதே அப்பகுதி மக்களின் முக்கிய கோரிக்கையாக உள்ளது.



கோவை மாவட்டம், பீளமேடு பகுதியை சார்ந்த அசோக் குமார் திருமதி. கௌசல்யா ஆகியோரின் மகன் அகிலன் (15) பள்ளியில் நடந்த சாதிப் பாகுபாடு காரணமாக தற்கொலை செய்துகொண்ட செய்தி அறிந்து கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று பெற்றோருக்கு ஆறுதல் கூறி, காவல் அதிகாரிகள் சரியான முறையில் விசாரணை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். மாநில மாணவர் அணி துணை செயலாளர் விஜி, கோகுல், பகுதிச் செயலாளர் ஏ.எஸ். நடராஜ், வட்டச் செயலாளர் ஆ. மாடசாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

படப்பை ஆ.மனோகரன் வரவேற்புரை! சரஸ்வதி மனோகரன் முன்னிலை!

சாலமங்கலம் சா.வேலு - மகாலட்சுமி இல்லத் திருமண விழா!

டி.ஆர்.பாலு எம்.பி. – தா.மோ.அன்பரசன் வாழ்த்துரை!

காஞ்சிபுரம், அக். 24-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றியம், சாலமங் கலம் கிளைக் கழகச் செய லாளர் - ஒன்றியக் குழு உறுப்பினர் சாலமங்கலம் சா.வேலு - வே.மகாலட் சுமி ஆகியோரின் புதல்வி வே.சங்கீதாவுக்கும் காஞ்சி புரம் மாவட்டம், திருப்பெ ரும்புதூர் வட்டம், இரும் பேடு கிராமத்தைச் சேர்ந்த ஜெ.தம்பிரான் - டி.சித்ரா ஆகியோரின் புதல்வரும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளரும் ஒன்றியக் குழு உறுப்பினரு மான த.சந்திரசேகர் (எ) தனசேகருக்கும் மணவிழா 25.10.2026 - ஞாயிறு காலை 7.30 மணியளவில் ஓரகடம், திருப்பெரும்பு தூர் ரோடு, வல்லக் கோட் டையில் அமைந்துள்ள பிரம்மசக்தி திருமண மண் டபத்தில் நடைபெறுகிறது.



இம்மணவிழா வர வேற்பு இன்று (24.10.2026 - சனிக்கிழமை) மாலை 6.30 மணியளவில் நடை பெறுகிறது.

இம்மணவிழா வரவேற் புக்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலா ளர் படப்பை ஆ.மனோக ரன் வரவேற்கிறார். சரஸ் வதி மனோகரன் முன்னிலை வகிக்கிறார்.

இம்மணவிழா வரவேற் பில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., காஞ் சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்ப ரசன் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்து கின்றனர்.

இம்மணவிழா வரவேற் பில் திருமுடிவாக்கம் ஏ. மணி, ஏ.வந்தேமாதரம், உமாமகேஸ்வரி வந்தேமா தரம், கோ.சத்தியமூர்த்தி, எஸ்.ஜபருல்லா, எஸ்.டி. கருணாநிதி, ந.கோபால், ஆர்.சதீஷ்குமார், கோல்டு டி.பிரகாஷ், முனைவர் எல்.பிரபு, வ.நந்தகோ பால், சி.பார்த்தசாரதி, மூ.ராஜேந்திரன், எஸ்.கர் ணன், குமுதா சுமன், டி. லோகநாதன், த.ஏழுமலை, என்.வாசு, வி.விஜயகுமார், டி.கே.கமலகண்ணன், கோ.ஜானகிராமன், ப.ராம மூர்த்தி, வி.தினேஷ், கலா நிதி குணாளன், விக்கி (எ) விக்னேஷ்வரன், எஸ்.ஜெக தீன், தே.ஜெகன், தேவேந் திரன், வி.கோதண்ட ராமன், மலர்விழி, தமிழ் அமுதன், என்.எஸ். இளங்கோ, பா.அறிவொளி, ரா. தீபக்ராஜ், மா.சே.பிர காஷ், க.பா.ஆடலரசு, பொன்.இளையபாரதி, லோ.சுதாகர், அ.ஜமீர், நா.ஜெகதீசன், ஜெ. கோகுல்நாதன், ஜெ.குண சேகரன், கே.ஆர்.ரேவதி சதீஷ், ரா.பிரதீப், சே.பால கிருஷ்ணன், மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகா நடராஜன், ஜி.இருசப்பன், ம.அசோக்குமார், ஏ.இ. பஞ்சாட்சரம், ப. வேல்மு ருகன், ராஜலட்சுமி ராஜி, இரா.மணிகண்டன், ச.பாலகிருஷ்ணன், க.அன் பழகன், லட்சாவதி கரு ணாகரன், மலர்விழி முரு கன், அன்னம்மாள் மோகன், உஷாநந்தினி எத்திராஜ், லோகநாயகி சாமிநாதன், ச. பாண்டி, தா.அன்பழகன், வி.அன்பு உள்ளிட்ட பலர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

பெரம்பலூர் மாவட்ட முன்னாள் செயலாளர்

குன்னம் சி.இராஜேந்திரன் படத்திறப்பு!

முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு - ஆ.இராசா எம்.பி. - வீ.ஜெகதீசன் பங்கேற்பு!

பெரம்பலூர், அக், 24-

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில், பெரம் பலூர் முன்னாள் மாவட்டக் கழகச்செயலா ளர் மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் தலைவர் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன் னம் சி.இராஜேந்தி ரனின் திருஉருவப் படத் திறப்பு நிகழ்ச்சி முத்து கிருஷ்ணா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர் கே.என். நேரு ,முன்னாள் மத்திய அமைச்சர் ஆ. இராசா.எம்.பி., உள்ளிட் டோர் கலந்து கொண்ட னர்.

பெரம்பலூர் முன் னாள் மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் கடந்த மாதம் 7ஆம் தேதி உடல் நலக்குறைவால் காலமா னார். அவரது திரு உரு வப்பட திறப்பு விழா நிகழ்ச்சி முத்துகிருஷ்ணா தனியார் திருமண மண்ட பத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கழக முதன்மைச் செயலாள ரும், முன்னாள் அமைச்ச ருமான கே.என்.நேரு, கழக துணைப் பொதுச்செ யலாளரும், மேனாள் ஒன் றிய அமைச்சருமான ஆ.இராசா.எம்.பி., ஆகி யோர் கலந்து கொண்டு, மறைந்த குன்னம் சி.இரா ஜேந்திரன் உருவப் படத்தை திறந்து வைத்து, அவர் தி.மு.க. விற்காக செய்த அர்ப்பணிப்பு மற்றும் களப்பணிகள் குறித்தும், அவர் பொறுப் பில் இருந்த காலத்தில் தி.மு.க. சார்பில் நடத்தப் பட்ட பல்வேறு கட்ட போராட்டங்கள், கட்சி யின் வளர்ச்சி குறித்தும் பேசினார்கள்.

பெரம்பலூர் தி.மு.க. முன்னாள் மாவட்ட செய லாளர், மாநில நிர்வாகி யாக இருந்த குன்னம் சி. ராஜேந்திரன் படத்திறப்பு விழா, தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. தலை மையில், தி.மு.க. முதன் மைச் செயலாளர் கே.என். நேரு எம்.எல்.ஏ. நேற்று திறந்து வைத்தார். பெரம் பலூர் திமுக மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெக தீசன் வரவேற்றார். குன் னம் ராஜேந்திரனின் குடும் பத்தினரான ரமேஷ், செந் தில்நாதன், வெற்றிவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் சி.வெ.கணே சன், திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செய லாளர் பா. துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா. ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கள் கி.முருகந்தன், ந.ஜெக தீஷ்வரன், செ.அண்ணா துரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், டி.கே. ராமச்சந்திரன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் என். கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ் குமார், செ.நல்லதம்பி, தி. மதியழகன், சி.ராஜேந்தி ரன், ஒன்றிய பொறுப்பா ளர்கள் டாக்டர் செ.வல்ல பன், அழகு. நீலமேகம், மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞர் ப.செந்தில் நாதன், தொ.மு.ச. மு.ராஜ காந்தம்,

வேப்பந்தட்டை ஒன் றிய முன்னாள் பெருந்த லைவர் க.ராமலிங்கம், முன்னாள் துணை பெருந் தலைவர் எம்.ரெங்கராஜ், அரும்பாவூர் பேரூர் கழக செயலாளர் ஆர்.ரவிச்சந்தி ரன், பூலாம்பாடி பேரூர் கழக செயலாளர் செல்வ லட்சுமி சேகர், லெப்பைக் குடிக்காடு பேரூர் கழகச் செயலாளர் ஜாகிர் உசேன், மாவட்ட இளை ஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ் கர், துணை அமைப்பாளர் கள் டி.ஆர்.சிவசங்கர், அ. அப்துல்கரீம், வ.சுப்ரமணி யன்,

ஆர்.அருண், மா.பிரபா கரன், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் பேரவை தலை வர் கே.கே.எம்.குமார், தொ.மு.ச. கவுன்சில் பேரவை மாவட்டச் செய லாளர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் முத்தரசன், மாவட்ட சிறு பான்மை அணி அமைப் பாளர் பாரி(எ) அப்துல்பா ருக், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க. கமல், மாவட்ட நெசவா ளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணுகோபால், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்க ராசு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகா தேவி ஜெயபால், தொழி லாளர் அணி அமைப்பா ளர் ஆர்.முருகேசன், விவ சாய கூலித் தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ. எம். கே. கரிகாலன்,

மாவட்ட மகளிர் அணி விளையாட்டு மேம் பாட்டு அணி அமைப்பா ளர் வெ. கார்மேகம், தலைமை கழக பேச்சாளர் கள் எசனை ஆறுமுகம், மு. விஜயரத்தினம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி. இராசா, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பா ளர் எம். மணிவாசகம், வழக்கறிஞர் கண்ணன் மற்றும் குன்னம் சி. இரா ஜேந்திரன்குடும்பத்தினர்க ளான மனைவி ரா. ராமதி லகம், மகன்கள், மருமகள் கள் ரா. செந்தில்நாதன், அமுதா, ரா. வெற்றிவேல் விஜயபிரியா, ரமேஷ் ராஜேந்திரன்சந்திரலேகா உள்ளிட்ட ஏராளமா னோர் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட வர்த்தக அணி தலைவர்

சிப்ஸ்மணி (எ) கே.சுப்பிரமணி படத்திறப்பு!

தா.மோ.அன்பரசன், எஸ்.ஆர்.ராஜா, டி.காமராஜ், எஸ்.சேகர், டி.ஆர்.கோபி எம்.சி. பங்கேற்பு!

சென்னை, அக்.24-

நாகர்கோயில் வடசேரி பகுதியில் தனது இளமைக் காலம் தொட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தில், அண்ணா, கலைஞர், கழ கத் தலைவர் தளபதி அவர் களின், பாதையில் பய ணித்து, பல ஆண்டுகளாக தாம்பரத்தில், வசித்து வந்த, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி தலைவர், சிப்ஸ்மணி (எ) கே.சுப்பிரமணி, அவர்க ளின், படத்திறப்பு நிகழ்ச்சி, இன்று (24.10.2026 சனிக்கிழமை) மாலை 5.30 மணிக்கு, மேற்கு தாம்பரம், விஷ்ணு நகர், கிருஷ்ணா நகர் அரு கில், அவரது இல்லத்தில், நடைபெற உள் ளது.



நிகழ்ச்சியில் அவ ரது திருவுருவப் படத்தினை காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், மேனாள் அமைச்சர் தா.மோ.அன்பர சன், தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர், முன் னாள் சட்டமன்ற உறுப்பி னர் எஸ்.ஆர்.ராஜா ஆகி யோர் திறந்து வைத்து மறைந்த சிப்ஸ் மணி அவர் களின் நினைவுகூர்ந்திட உள்ளார்கள்.

நிகழ்ச்சியில் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர் கள் டி. காம ராஜ், எஸ்.இந் திரன், எஸ். சேகர், டி.ஆர். கோபி எம்.சி. ம ற் று ம் தலைமை செயற் குழு, பொதுக் குழு உறுப்பி னர்கள், மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பகுதி, வட்ட செ ய ல ா ள ர் க ள் , நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மக ளிர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள். கழகத் தோழர்கள் அனைவரும் படத்திறப்பு நிகழ்ச்சியில், கலந்து கொள்கின்றனர்.



வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு மண்டலம் 4ல் மழை நீர் தேங்கும் சுரங்கப்பாதை, பக்கிங்காம் கால்வாய், கொடுங்கையூர் கால்வாய் பகுதிகளில் முன்னெச்சரிக்கை கண்காணிப்பு கேமரா வானிலை மைய (வார்ரூம்) சம்பந்தமான பகுதிகளை மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி. நேரில் சென்று ஆய்வு செய்தார்.